Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 184 | சனிக்கிழமை | வைகாசி 14 ஆம் நாள் 29 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 12 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## வடக்கில் 92 யாழில் 64

யாழ்ப்பாணம், மே 29
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று 721 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனை 12 ➤

### யாழ்ப்பாணத்தில்

# தடுப்பூசியேற்றல் நாளை ஆரம்பம்

- 50,000 சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் இன்று வரும்
- சுகாதார மருத்துவ அதிகாரிகளே முன்னுரிமையை தீர்மானிப்பர்
- 30 வயதுக்கு மேற்பட்டோரே முதல் கட்டத்தில்

யாழ்ப்பாணம், மே 29
பொதுமக்களுக்கான தடுப்பூசியேற்றல் வடக்கு மாகா ணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன்முறையாக நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இலங்கைக்கு இரண்டாம்கட்ட நன்கொடையாக சீனாவால் வழங்கப்பட்ட சைனோஃபோர்ம் தடுப்பூசிகளில் 50 ஆயிரம் தடுப்பூசிகள் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இன்று எடுத்து வரப்படவுள்ளன என அறியமுடிகின்றது. 02 ➤

### 31, 4ஆம் திகதிகளிலும்

## பயணங்களுக்குத் தடை

*மக்கள்தான் காரணம் என்கிறார் ஜனாதிபதி*

கொழும்பு, மே 29
கடந்த 25ஆம் திகதி பயணத் தடை தளர்த்தப்பட்டபோது பொது மக்கள் செயற்பட்ட விதம் காரணமாக நாளை மறுதினம் திங்கட்கிழமை மற்றும் எதிர்வரும் வெள்ளிக்கிழமையின் போது தளர்த்த தீர்மானிக்கப்பட்டிருந்த பயணத் தடை 02 ➤

## தொற்றிலிருந்து மீண்ட பெண் மீண்டும் தொற்று ஏற்பட்டு சாவு

கொழும்பு,மே 29
கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்த பெண் ஒருவருக்கு, மீண்டும் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். தொடன்துவ பிரதேசத்தைச் 02 ➤

## நல்லூர் அரசடி முடக்கப்பட்டது

யாழ்ப்பாணம், மே 29
யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/103 கிராம அலுவலர் பிரிவில் ஒரு பகுதி (அரசடி) முடக்கப்பட்டுள்ளது. அதன்படி, அந்தப் பகுதியில் 667 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 912 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாண மாநகர சுகாதார மருத்துவ அதி 02 ➤

## அவசிய தேவைக்கே இனி வாகன அனுமதி

மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 29
பயணத் தடையின்போது மிகமிக அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரமே வாகனங்களுக்கு அனுமதி வழங்குமாறு வடக்கு மாகாண கொரோனாத் தடுப்பு செயலணி தீர்மானித்துள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் 02 ➤

யாழ். நாகர்கோவில் பகுதியில்

## முன்னாள் போராளி ரி.ஐ.டியால் கைது

*ஆயுதங்கள் மீட்பு என்றும் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மே 29
வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பிரதேசத்தில் முன்னாள் போராளி ஒருவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரது 12 ➤

## மருத்துவமனைக்கு கூட்டிச்செல்ல அனுமதிப்பத்திரம் தேவையில்லை

பொலிஸ் பேச்சாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 29
“நோயாளியொருவரை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வதற்கு முன் அனுமதி பெறவேண்டியதில்லை. சொந்த வாகனத்திலோ அல்லது பிற வாகனத்திலோ கொண்டுசெல்ல முடியும்.” என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண 12 ➤

## வவுனியா நீதிவானுக்கு கொரோனா

வவுனியா, மே 29
வவுனியாவில் நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. எழுமாறான பி.சி.ஆர். சோதனையில் அவருக்குத் தொற்று 12 ➤



கொரோனா வைரஸ்

## காற்றின் மூலம் பரவாது; கண்கள் ஊடாக நுழையும்

*தொற்று நோய் நிபுணரான திஸ்ஸ விதாரண எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, மே 29
“கொரோனா வைரஸ் காற்றின் மூலம் பரவுகின்றது என வெளியாகும் கருத்துக்கள் கட்டுக்கதையே. இதேநேரம், கொரோனா வைரஸ் ஒரு நபரின் கண்களின் ஊடாகவும் நுழை 02 ➤

## 5,000 /= கொடுப்பனவு அடுத்தவாரம்

கொழும்பு, மே 29
நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணத் தடையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை அடுத்த வாரம் 12 ➤

## மீனவர்கள் கைகலப்பு நால்வர் சிகிச்சையில்

ஒருவர் கைது

முல்லைத்தீவு, மே 29
முல்லைத்தீவு மாத்தளன் மற்றும் இரணைப்பாலை பகுதிகளைச் சேர்ந்த சாலை சிறுகடலில் இறால் பிடித்துவரும் மீனவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில், நால்வர் காயமடைந்தனர். அவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 12 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடுப்பூசியேற்றல்...

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒவ்வொரு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலும் எந்தக் கிராம அலுவலர் பிரிவைத் தெரிவுசெய்வது என்பது உள்ளிட்ட விடயங்களை அந்தந்தப் பகுதி சுகாதார மருத்துவ அதிகாரிகளே தீர்மானிப்பார்கள். கடந்த 2 அல்லது 3 மாதங்களுக்குள் தொற்று ஏற்பட்ட எண்ணிக்கை, உயிரிழப்பு எண்ணிக்கை மற்றும் தொற்றுப் பரவலுக்கு ஏதுவான கிராமங்கள் என்ற அடிப்படையில் தடுப்பூசி ஏற்றலுக்கான கிராம அலுவலர் பிரிவுகளை சுகாதார மருத்துவ அதிகாரிகள் தெரிவுசெய்வார்கள். இது தொடர்பான விவரங்கள் கொழும்பு சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து அனுமதி கிடைத்ததும் தடுப்பூசி ஏற்றல் ஆரம்பமாகும்.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கே தடுப்பூசி ஏற்றப்படும். சாதாரணமாக தடுப்பூசி போட முடியாத பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் (கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார்) தவிர்ந்த ஏனையோருக்கு தடுப்பூசி ஏற்றப்படும். 4 நாள்கள் இந்தச் செயற்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்படும். அதன்பின்னர், தடுப்பூசிகள் ஏற்றப்படாது எஞ்சியிருந்தால் தடுப்பூசி முடிவுற்ற ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

சைனோஃபோம் தடுப்பூசி சாதாரணமாக ஏனைய தடுப்பூசிகளை களஞ்சியப்படுத்தி வைப்பதைப் போன்று வைக்கலாம். யாழ்ப்பாணத்துக்கு இன்று எடுத்துவரப்படும் தடுப்பூசிகள் ஒவ்வொரு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கும் அனுப்பப்பட்டு அங்குள்ள களஞ்சியங்களில் சேமித்து வைக்கப்படும்.

இதேவேளை, கொரோனாத் தடுப்பூசி வழங்கல் திட்டத்தில் குருநாகல், காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் முதல் நிலையில் இருந்தன. ஆனால் இறுதி நேரத்தில் மாத்தறை மாவட்டம் உட்புகுத்தப்பட்டது. இவ்வாறானதொரு நிலையிலேயே, யாழ்ப்பாணம் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு அடுத்த கட்ட தடுப்பூசி ஏற்றல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று கொரோனா கட்டுப்பாட்டு செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு முழுமையாக வழங்குவதற்கு 3 லட்சத்து 50 ஆயிரம் தடுப்பூசிகள் தேவை என்று வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் கோரிக்கை விடுத்திருந்தது. இதுவரை இரண்டு தடவைகள் தடுப்பூசி வழங்கப்படும் என்று வடக்கு மாகாணத்துக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் அது கிடைக்காமல் போயிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## 31, 4ஆம் திகதிகளில்...

நீட்டிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொவிட் தடுப்புச் செயலணியின் கூட்டம் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டம் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

பயணத் தடையின் காரணமாக பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாமல் இருப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மூன்று நாள்களுக்கு பயணத் தடையை தளர்த்துவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் கடந்த 25ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு பயணத் தடை தளர்த்தப்பட்ட வேளையில் பொதுமக்கள் செயற்பட்ட விதம் நோய்த்தொற்று மேலும் பரவுவதற்கு இடமளித்ததைப் போன்றதாகும். நோய்த்தொற்று பரவுவதை தடுப்பதற்கு அரசு எடுக்கும் முயற்சிகள் இதன் மூலம் தோல்வி அடையக்கூடுமென்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதன்படி நாளைமறுதினம் திங்கட்கிழமை மற்றும் ஜூன் மாதம் 4ஆம் திகதி ஆகிய இரு தினங்களில் பயணத் தடையை தளர்த்துவதற்கு எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தை இடைநிறுத்துவதற்கும் எதிர்வரும் நாள்களில் பொது மக்களுக்கு அவசியமான பொருள்களை நடமாடும் விற்பனை சேவையின் மூலம் விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

பயணத் தடை நடைமுறையிலுள்ள காலங்களில் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் வீட்டிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதி உண்டு. வீதிகளில் பயணிக்கும்போது தொழில்புரியும் இடங்களால் வழங்கப்பட்டுள்ள கடிதம் மற்றும் தொழில் அடையாள அட்டையை கைவசம் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். கொவிட் தொற்று பரவுவதைத் தடுப்பதற்கு அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு பொதுமக்களும் பொறுப்புடன் ஒத்துழைக்க வேண்டுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சைனோஃபோம் தடுப்பூசி வழங்குதல் மே மாதம் 8 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் முதலாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்ட பொதுமக்கள் ஜூன் மாதம் 8 ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்குள் முதலாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்ட இடத்திலேயே இரண்டாவது தடுப்பூசியையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சுகாதாரசு பிரிவுக்கு பணிப்புரை விடுத்தார்.

சுகாதார பிரிவு இனங்கண்டுள்ள ஏனைய மாவட்டங்களிலும் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையை முறையாகவும் தொடர்ச்சியாகவும் நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தையும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். (ஒ.5.இ)

## தொற்றிலிருந்து...

சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார். ஹிக்கடுவ ஆரச்சிகந்த கொவிட் சிகிச்சை நிலையத்தில் 14 நாள்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய 3 பிள்ளைகளின் தாயான அவருக்கு, மீண்டும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றால் அவருக்கு நிமோனியா பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மூச்சுவிட முடியாமல் சிரமப்பட்ட குறித்த பெண் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## நல்லூர்...

காரி பணிமனையினர், மாகாண சுகாதாரப் பணிப்பாளரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய குறித்த கிராம அலுவலர் பிரிவு பகுதியளவில் முடக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வார காலமாக 22 பேர் குறித்த பகுதியில் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டமையால், குறித்த பகுதி முடக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே அரசடிப் பகுதியில் உள்ள கோவில் ஒன்றில் சுகாதார நடைமுறைகளை மீறி தேர் உற்சவம் இடம்பெற்ற பின்னர் அந்தப் பகுதியில் அதிகளவில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த,ப26,20)

## அவசிய...

க.மகேசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கொரோனா செயலணியின் கூட்டம், ஆளுநர் தலைமையில் 'சூம்' செயலி மூலம் நேற்று நடைபெற்றது. அதன்பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடக்கில் கொரோனாத் தொற்றின் தற்போதுள்ள நிலைமைகள், அதன் முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. இதில் யாழ்ப்பாண மாவட்ட நிலைமைகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதேபோல், வடக்கு மருத்துவமனைகளில் உள்ள நிலைமைகள், அங்குள்ள தேவைகள், மருத்துவ உபகரணங்களின் தேவைப்பாடுகள் மற்றும் ஒட்சிசன் சிலிண்டர் தேவைப்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு அதனுடைய குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்குரிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

குறிப்பாக வடக்கு மாகாணத்திலிருந்து அதிகளவான வாகனங்கள் வெளியேறுவதன் காரணத்தால் பயணத் தடைக் காலத்தில் மிகமிக அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரமே வாகனங்களுக்கு அனுமதி வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த அறிவுறுத்தல் மிக விரைவில் பொதுமக்களுக்கு வழங்கப்பட உள்ளது.

### நான்கு கிராமங்கள் முடக்கம்

யாழ். மாவட்டத்தில் மொத்தமாக நான்கு கிராமங்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியிருக்கின்றோம். அந்த வகையில், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பலாலி வடக்கு அன்ரனிபுரம் கிராமம், தையிட்டி கிராமம், காரைநகரில் ஜே/47 கிராம அலுவலர் பிரிவு மற்றும் தற்போது, நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/103 அரசடி கிராம அலுவலர் பிரிவில் ஒரு பகுதி ஆகியவை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதாரப் பகுதியினரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நான்கு பகுதிகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

### உணவு

ஏற்கனவே 80 மில்லியன் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல் இந்தவாரம் 11 மில்லியன் ரூபா பெறுமதியான உணவுப்பொருள்களுக்கான நிதி கோரி விண்ணப்பித்துள்ளோம்.

நடமாடும் விற்பனை நிலையங்கள் ஊடாக பொதுமக்களுக்கு அனைத்து கிராமங்களிலும் உணவுப்பொருள்கள் விநியோகிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

### அனுமதி

நடமாடும் வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கும் செயற்பாடுகளை பிரதேச செயலர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஆகியோர் முன்னெடுத்துள்ளனர். அத்தோடு வாகனங்கள், வாகன உரிமையாளர்கள் மற்றும் அந்த வாகனத்தில் பயணிப்போர் போன்றோர் விவரங்களை பிரதேச செயலர் ஊடாக விண்ணப்பித்து அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பொதுமக்கள் தமது அத்தியாவசிய சேவைகளை வீடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளும் இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேக்கரி பொருள்களை நடமாடும் வண்டிகள் மூலம் விற்பனைசெய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவமனை செல்வோர் மற்றும் விமான நிலையங்களுக்கு செல்வோர் போன்றவர்களுக்கு மாத்திரம் பயணத் தடை அனுமதி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படுகின்றது. ஏனையோருக்கான அனுமதி வழங்கப்படவில்லை. எனவே, பொதுமக்கள் ஏனைய விடயங்கள் தொடர்பில் அனுமதிக்காக விண்ணப்பிக்க வேண்டாம்.

### பொறுமையுடன் ஒத்துழையுங்கள்

இந்த அபாயமான நிலைமையைக் கடந்து செல்வதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் மிக அவசியம். எனவே பொதுமக்கள் தற்போதைய அசௌகரியமான நிலையை அனுசரித்து சற்று பொறுமையாக செயற்படுவதன் மூலம் எமது பிரதேசத்தைக் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாக்க முடியும்.

மேலும், கோப்பாயிலுள்ள கொரோனா இடைக்கால சிகிச்சை நிலையத்தில் 229க்கு மேற்பட்டோரும், வட்டுக்கோட்டை நிலையத்தில் 199 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். வெகு விரைவில் நாவற்குழி இடைக்கால சிகிச்சை நிலையம் செயற்படத் தொடங்கும். - என்றார். (கு-26)

## காற்றின்...

யக்கூடும் என்பது உண்மையே."

இவ்வாறு தெரிவித்தார், தொற்றுநோய் ஆராய்ச்சியில் இலங்கையின் முன்னணி நிபுணரும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண .

அவர் மேலும் தெரிவிக்கையில்:

"வைரஸ் ஒருபோதும் வெளிச்சூழலில் வளரும் திறன் கொண்டது அல்ல. பொதுவாக வைரஸ் உயிருள்ள உயிரணுக்களில் மட்டுமே வளரும். இதனிடையே, சாதாரண வெப்பநிலையில் வைரஸ் அழிவடைந்துவிடும்.

அதேபோல் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நபரின் உமிழ்நீர் மூலம் வைரஸ் பிறிதொரு நபருக்கு நுழைய முடியும்.

இதனால் முகக்கவசம் அணிந்து தனியாள் இடைவெளியைப் பேணுவதன் மூலம் வைரஸ் பரவுவதைத் தடுக்க முடியும்.

இதேநேரம், கொரோனா வைரஸ் ஒரு நபரின் கண்களின் ஊடாகவும் நுழையக்கூடும். வைரஸ் சில மேற்பரப்புகளில் சில காலம் இருக்கக்கூடும். சவர்க்காரம் போட்டு கை கழுவுவது வைரஸை அழித்துவிடும்" என்றார். (கு-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரஷ்யாவிடமிருந்து 50,000 தடுப்பூசிகள்

கொழும்பு, மே 29
ரஷ்யாவிடமிருந்து 50 ஆயிரம் ஸ்புட்னிக் வி கொரோனாத் தடுப்பூசிகள் நேற்று முன்தினம் இரவு இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.
ரஷ்யாவிடமிருந்து 65 ஆயிரம் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளை இலங்கை கொள்வனவு செய்திருந்தது. முதல் கட்டமாக 15 ஆயிரம் தடுப்பூசிகள் இந்த மாதம் 3ஆம் திகதி இலங்கைக்கு கிடைக்கப் பெற்றிருந்தன.
எஞ்சிய 50 ஆயிரம் தடுப்பூசிகள் நேற்று முன்தினம் இரவு இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. (எ,ஒ,4)

# ரஷ்யத் தடுப்பூசிகள் கண்டி மாவட்டத்துக்கு

கொழும்பு, மே 29
ரஷ்யாவிடமிருந்து கிடைக்கப்பெற்ற தடுப்பூசிகள் கண்டி மாவட்டத்துக்கு வழங்கப்படவுள்ளன என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.
ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளில் இரண்டாம் கட்டமாக 50 ஆயிரம் தடுப்பூசிகள் இலங்கையை நேற்றுமுன்தினம் இரவு வந்தடைந்தன.
அவற்றில் முதலாவது டோஸ் ஏற்றிய 15 ஆயிரம் பேருக்கு இரண்டாவது டோஸ் ஏற்ற ஒதுக்கப்பட்டுள்ளது.
எஞ்சிய தடுப்பூசிகள் கண்டி மாவட்டத்துக்கு வழங்கப்படவுள்ளன. (ஒ.5,இ)





சீன அரசின் இரண்டாவது கட்ட நன்கொடையில் கிடைக்கப்பெற்ற சைனோஃபோர்ம் தடுப்பூசிகளில் ஒரு தொகுதி மாத்தறை மாவட்டத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. அங்கு நேற்றைய தினம் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் இராணுவத்தினரின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டன. (ஒ,5)

# ஜூன் 7க்குப் பின்னரும் பயணத் தடையை நீடிப்பதா?

## இதுவரை முடிவில்லை என்கிறார் பிரதிப் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத்



**கொழும்பு, மே 29**
**ஜூன் 7ஆம் திகதி வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகளை அதன் பின்னரும் நீடிப்பதா அல்லது தளர்த்துவதா என்பது தொடர்பில் சுகாதார அமைச்சோ அதிகாரிகளோ இதுவரை எந்தவொரு முடிவும் எடுக்கவில்லை**

இவ்வாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.
மேலும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை, பரவல் வீதம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளை ஆராய்ந்தே பயணத் தடை நீடிப்பு அல்லது தளர்வு தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.
கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை அண்மைய நாள்களாக குறைவடைந்து செல்கின்றது.
பயணத் தடைக்கு முன்னர் மேற்கொண்ட சில நடவடிக்கைகளின் பலன் இப்போது தெரிகின்றது என்று குறிப்பிட்டார்.
தற்போது விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாட்டின் தாக்கத்தை இன்னும் 14 நாள்களில் உணர முடியும் என்றார் ஹேமந்த ஹேரத். (ஒ.5,இ)



## அத்தியாவசிய பொருள்களின்

# விலையை அதிகரித்தால் அனுமதிப்பத்திரம் ரத்து

கொழும்பு, மே 29
பயணக் கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ள தருணத்தில், வியாபாரத்துக்கு அனுமதி பெற்றுள்ள விற்பனை நிலையங்களில், அத்தியாவசியப் பொருள்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டால், அவர்களின் அனுமதிப்பத்திரம் உடனடியாக ரத்துச் செய்யப்படும்.
இவ்வாறு கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,



பயணக்கட்டுப்பாட்டால்,வீடுகளுக்கு நேரடியாகச் சென்று பொருள் விநியோகம் மற்றும் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் இரு கடைகளைத் திறத்தல் என பொதுமக்கள் அத்தியாவசிய பொருள்களைப் பெறுவதற்கு வசதியாக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
எனவே இதனை சாதகமாகப் பயன்படுத்தி, அதிக விலைக்கு பொருள்கள் விற்பனை செய்யப்பட்டால், அவர்களுக்கான அனுமதிப்பத்திரம் ரத்து செய்யப்படும். அத்துடன் சம்பந்தப்பட்ட கிராம சேவகர் பிரிவிலுள்ள மற்றொரு கடைக்கு அந்த அனுமதிப்பத்திரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
அதேவேளை அதிக விலைக்கு பொருள்களை விற்பது தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் 1977 என்ற தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (எ-4)

# தடுப்பூசி வழங்கலுக்கு இடையூறு பெரமுனவின் மேயர் கைது

கொழும்பு, மே 29
சிறிலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த மொரட்டுவ மாநகரசபையின் மேயர் சமன்லால் பெர்ணான்டோ, கல்கிஸை பொலிஸாரால் நேற்று முற்பகல் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணியின்போது, மருத்துவரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
மொரட்டுவ பகுதியில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது தன்னால் தயாரித்து வழங்கப்பட்ட பெயர் பட்டியலில் உள்ளவர்களுக்கே தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும் என்று மேயர் வலியுறுத்தியதுடன், சுகாதார மருத்துவ அதிகாரியுடன் தர்க்கத்திலும் ஈடுபட்டார். பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருடனும் முரண்பட்டார். இது தொடர்பில் மருத்துவ அதிகாரி பொலிஸாரிடம் முறையிட்டதுடன், தனது கடமைக்கு இடையூறு விளைவித்த மேயருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். இது குறித்து பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்றுவந்தன. இந்நிலையில் நேற்று சட்டத்தரணி ஒருவர் ஊடாக, மேயர் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அவ்வேளையிலேயே அவர் கைதுசெய்யப்பட்டார். (ஒ.44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு மேலும் 20 லட்சம் தடுப்பூசிகள்

## சீனா உடன்பாடு



**கொழும்பு, மே 29**
**இலங்கைக்கு மேலும் 20 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகளை வழங்குவதற்கு சீனா உடன்பட்டுள்ளது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அதற்கமைவாக எதிர்வரும் ஜூன் மாதம் 8ஆம் திகதி மேலும் 20 லட்சம் தடுப்பூசிகளை, இலங்கைக்கு வழங்குவதற்கு சீன அரசு தீர்மானித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.
இதேவேளை முதல் தடவை சைனோஃபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்ட நிலையங்களிலேயே இரண்டாவது டோஸையும் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு, ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். (எ-4)



## சோதனையால் மக்களை சிரமப்படுத்த வேண்டாம்

*பொலிஸாருக்கு அறிவிப்பு*

கொழும்பு,மே 29
நாட்டில் பயணத்தடை விதிக்கப் பட்டுள்ள காலப்பகுதியில், வீதிகளில் கடமையிலுள்ள பொலிஸார், வாகனங்களைப் பரிசோதிக்கும் போது பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இது தொடர்பான சிறப்பு சுற்றறிக்கை, பொலிஸ்மா அதிபரால், பொலிஸ் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
வீதித் தடைகளில் கடமையில் உள்ள பொலிஸார் மோசமாக நடந்து கொள்வதை ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.
இது போன்ற செயல்களால் பொலிஸ் சேவையின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கப்படுகின்றது.
மக்களை சிரமப்படுத்தும் பொலிஸார் தொடர்பான தகவல்கள் ஊடகங்களில் வெளியிடப்பட்டால், சம்பந்தப் பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (4)

## சதொசவுக்கு அழைத்தால் வீடுகளுக்கே பொருள்கள்

கொழும்பு, மே 29
பொதுமக்கள் சதொசவின் 1998 தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம் அல்லது www.lankasathosa.lk என்ற இணையத்தளத்துக்குச் செல்வதன் மூலம், நிவாரணப் பொதிகள் உட்பட பிற அத்தியாவசிய பொருள்களை வீட்டு வாசலில் பெற்றுக் கொள்ள முடியும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.
நடைமுறையில் உள்ள பயணக்கட்டுப்பாடுகள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஆயிரம் ரூபா அல்லது 5ஆயிரம் ரூபா பெறுமதிகொண்ட பொருள்கள் அடங்கிய பொதிகள் மற்றும் 114 விதமான பொருள்களை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.
நீங்கள் செலுத்தும் விலைக்கு அதிக மதிப்புள்ள பொருள்கள் உங்களுக்குக் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## கவிஞர் பஷீர் காலமானார்

கொழும்பு, மே 29
ஈழத்தின் முக்கிய எழுத்தாளரும் கவிஞருமான மு. பஷீர், தனது 78ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.
நீண்ட காலமாக நோய் வாய்ப்பட்டு இருந்தநிலையில் அவர் நேற்றுக் காலமானார்.
பஷீர், சிறந்த சிறுகதையாளர், புதுக்கவிதையாளர், முற்போக்கு இயக்கத்தாலும் மல்லிகையாலும் வளர்ந்தவர். பல சிறுகதைத் தொகுப்புகளை தந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## அக்காவையும் தம்பியையும் கட்டிவைத்து சித்திரவதை

*கோப்பாய் பொலிஸாருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், மே 29
சகோதரர்களான அக்காவையும் தம்பியையும் கட்டி வைத்து கடுமையாக சித்திரவதை செய்தனர் என்று குற்றம்சாட்டி கோப்பாய் பொலிஸாருக்கு எதிராக பாதிக்கப்பட்டவர்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.
திருட்டுச் சம்பவம் ஒன்றில் சந்தேகநபரான புத்தூர் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் இருபாலை பகுதியில் உள்ள அவரது சகோதரியின் வீட்டில் தலைமறைவாகி உள்ளார் என்று கூறி, கோப்பாய் பொலிஸார் கடந்த 21 ஆம் திகதி குறித்த வீட்டில் சோதனை மேற்கொண்டுள்ளனர். அங்கு அந்த நபர் இல்லை என்றதும் திரும்பிச் சென்றுவிட்டு அன்றைய தினம் நள்ளிரவு ஒரு மணியளவில் மீண்டும் குறித்த வீட்டுக்குள் பொல்லுகளுடன் நுழைந்து வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
பின்னர், கடந்த 23 ஆம் திகதி குறித்த சந்தேகநபர் இருக்கும் இடத்தை அறிந்த சந்தேகநபரின் குடும்பத்தினர் அவரை அன்றையதினம் அதிகாலை பொலிசில் ஒப்படைப்பதற்காகக் கொண்டுசென்றுள்ளனர். பொலிஸார் அவரை செம்மணிப் பகுதிக்கு அழைத்து வருமாறு கூறி அங்கு கட்டி வைத்து கடுமையாகத் தாக்கிவிட்டு கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.
பின்னர் மீண்டும் குறித்த சந்தேகநபரின் சகோதரியின் இருபாலை வீட்டுக்கு வந்த பொலிஸார் சகோதரி மீது சந்தேகம் இருக்கிறது எனத் தெரிவித்து 23 ஆம் திகதி காலை 9 மணியளவில் கைதுசெய்துள்ளனர். அவரை இரு நாள்கள் பொலிஸ் நிலையத்தில் வைத்து மிளகாய் தூளை கண்ணில் தூவி பெண் பொலிஸார் இரு கைகளிலும் பிடித்து வைத்திருக்க ஆண் பொலிஸார் தடிகளால் மிக கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (த-இ)

## தொண்டமான் மண்டபத்தில் கொரோனா சிகிச்சைப் பிரிவு

நுவரெலியா, மே 29
இறம்பொடையில் அமைந்துள்ள தொண்டமான் கலாசார மண்டபத்தில் இடைநிலை கொரோனா சிகிச்சைப் பிரிவு தயார்படுத்தப்பட்டுள்ளது என்று மலையகத்துக்குப் பொறுப்பான கொவிட் பாதுகாப்பு செயலணியின் பிரதானி பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார். இந்தப் பிரிவுக்குத் தேவையான சமையலறை, பாதை, கட்டில்கள் மற்றும் வாகன தரிப்பிடங்கள் ஆகியவை உள்ளிட்ட அத்தியாவசிய பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் இராணுவத்தினர் தற்போது 275 படுக்கைகளைக்கொண்ட மத்திய நிலையத்தை அமைத்து வருகின்றனர். மருத்துவர்கள், சுகாதார ஊழியர்கள் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் தங்குவதற்கான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் சிகிச்சை பிரிவு இன்று சுகாதாரப் பிரிவினரிடம் கையளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# மதுபானத்தை பதுக்கி விற்பனை செய்தவர் கைது

யாழ்ப்பாணம், மே 29
மதுபானத்தை வீட்டில் பதுக்கி வைத்து விற்பனைசெய்த ஒருவர் கந்தரோடையில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுக்காலை முன்னெ [illegible]
யில் சந்தேகநபரிடமிருந்து 185 மில்லிலீற்றர் அளவுடைய 63 மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பயணத் தடை நடைமுறையில் உள்ளபோது மதுபானசாலை [illegible] கூடிய விலைக்கு மதுபானங்களை விற்பனைசெய்தமை தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் கந்தரோடையைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தீவு என்பது நினைவிருக்கட்டும்!

கொழும்புத்துறைமுகத்துக்கு அருகில் தீப்பற்றியெரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் மோசமான விளைவுகளை இலங்கை எதிர்கொள்ளலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்த கொள்கலன்களில் சுமார் 25க்கும் அதிகமான கொள்கலன்கள் ஆபத்தான அமிலங்கள் கொண்டவை. அத்தகைய அமிலத் தாங்கிகளில் ஏற்பட்ட கசிவே தீ விபத்துக்குக் காரணம் என்பது முதல்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இந்தத் தீ விபத்தை அடுத்து, கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் உள்ள இலங்கைக் கடற்பரப்புக்களில் அமிலக் கசிவுகள் மிகையாகவே அவதானிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக நாட்டில் அமில மழை பெய்வதற்கான சாத்தியங்கள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கையைத் தடுக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ இதுவரை எதுகாலும் எந்தச் சக்தியாலும் முடியவில்லை. எண்ணற்ற உதாரணங்கள் இதற்குக் கொட்டிக் கிடக்கின்றன. அமிலமழையொன்றை இந்த நாடு எதிர் கொள்ளுமாக இருந்தால் அது இமாலயமான பாதிப்புக்களை இலங்கையில் ஏற்படுத்தும் என்பது வெள்ளிடைமலை. விஞ்ஞான உலகம் அபாய ஒலியை இது விடயத்தில் எழுப்புகின்றது.


கப்பல் விபத்துக்குள்ளாகி அமிலப் பரவல் ஏற்பட்டுள்ள பகுதிகளில் மீன் பிடிக்கக்கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீனவர்களுக்கு எல்லையுண்டு. இந்தத் தடைகளால் அவர்களைக் கட்டுப்படுத்தலாம்தான். ஆனால் மீன்களுக்கு எல்லையில்லையே!. கொழும்புத் துறைமுகத்தை அண்டிய கடற்பரப்பில் ஏற்பட்ட அமிலத் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மீன்கள் குறித்த வட்டகையில்தான் சுற்றித்திரியும் என்பதற்கு என்ன உத்தரவாதம். ஆக, காற்று வழியாக வரும் கொரோனாவைப் போல் கடல் வழியாகவும் ஒரு பெருந்தொற்றுக்கு ஆட்படப்போகின்றோமா என்ற ஐயப்பாடு மேலெழுவதில் என்ன தவறு?.

இலங்கை ஒரு தீவு தேசம். தீவு நாடுகள் தாம் சார்ந்த கடற்பரப்புக்களில் மிகை அவதானிப்புடனும் விழிப்புணர்வுடனும் செயற்பட வேண்டும். ஏனெனில் அந்த நாடுகளில் பிரதான தேசிய வருவாய்களில் மீன்பிடியும், இன்னபல கடற்றொழில்களும் இடம்பிடித்திருக்கும். உலகில் எழுதப்படாத விதி இது. ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, கரீபியன் தீவுகள், கியூபா, மடகஸ்கார், நோர்வே மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளும்கூட தீவுசார் தேசங்களே. இந்த நாடுகளில் இத்தகைய மிகப் பெரும் கடல் விபத்துக்குள் இடம்பெற்றன என்று எப்போதாவது கேள்விப்பட்டதுண்டா?. எனின், இலங்கை மட்டும் ஏன் விதிவிலக்காக மெத்தனப்போக்குடன் செயற்படுகின்றது?.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதமும் நியூ டயமன்ட் என்ற கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் இவ்வாறு விபத்துக்கு உள்ளானது. வெறும் எட்டு மாத இடைவெளியில் அத்தகைய பிறிதொரு பெரு விபத்தை இலங்கை சந்திக்கின்றது என்றால் எம் நாட்டின் கடற்பாதுகாப்புக் கொள்கையை என்னவென்று சொல்வது.

குறித்த கப்பலில் இவ்வாறாக ஒரு பெருவெடிப்பு ஆபத்துக் காரணமாக நங்கூரமிடுவதற்கு இந்தியாவிடமும் கட்டாரிடமும் அனுமதி கேட்கப்பட்டுள்ளது என்றும், அந்த நாடுகள் ஆபத்தின் கனதியை உணர்ந்து அந்தக் கோரிக்கையை நிராகரித்தன என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன. அவ்வாறெனின் என்ன அடிப்படையில் இலங்கை அனுமதித்தது?.

ஏற்கனவே நம் நாடு பொருளாதார வளர்ச்சியில் அதல பாதாளத்தில் உள்ளது. சுற்றிலும் கடன்களால் சிதைவுறுகின்றது. இத்தகையதொரு நிலையில், இவ்வாறான பெருவெடிப்புக்களையும் தீ இடர்களையும் அனுமதித்து தேசிய ஏற்றுமதியை ஸ்தம்பிக்கச்செய்தால், இன்னொரு 'போர்ட் சிட்டி'யை சீனா அமைத்தாலும் அதில் ஐயத்துக்கு ஒன்றுமில்லைதான்.




## அத்தியாவசிய சேவைக்குச் செல்வோருக்கு நிறுவனத் தலைவரின் கடிதம் கட்டாயம்

### பொலிஸ் பேச்சாளர் விளக்கம்

**கொழும்பு, மே 29**



**பயணத் தடைக் காலங்களில் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோர் தமது நிறுவனத் தலைவரிடமிருந்து 'கடமை அழைப்புக்கான கடிதத்தை' வைத்திருப்பது அவசியம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

அத்தியாவசிய சேவைக்குச் செல்வோர் தமது உத்தியோக அடையாள அட்டைக்கு மேலதிகமாக நிறுவனத் தலைவரின் கடிதத்தை வைத்திருப்பது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.
மேலும் தடுப்பூசித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் இடங்களுக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் செல்வதற்கு எந்தத் தடையுமில்லை. அவசர பணத் தேவைக்கு ஏ.டி.எம். இயந்திரங்களுக்கு தங்களது இருப்பிடங்களிருந்து நடந்து செல்லக்கூடிய நியாயமான தூரத்தில் இருப்பவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் பொலிஸ் பேச்சாளர் சுட்டிக்காட்டினார். (ஒ.5.இ)

## மறுஅறிவித்தல் வரை திரையரங்குகள் பூட்டு

கொழும்பு, மே 29
மறுஅறிவித்தல் வரை நாட்டிலுள்ள உடற்பயிற்சி கூடங்கள் (ஜிம்), திரையரங்குகள் மற்றும் மசாஜ் நிலையங்கள் என்பவை மூடப்பட்டிருக்கும் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
நாட்டில் திருமண நிகழ்வுகள் அனைத்துக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளன. அந்தத் தடை தொடர்கின்றது. பதிவுத் திருமணம் மாத்திரம் ஆகக்கூடியது 15 பேருடன் நடாத்த முடியும். அதற்கு அந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் பொலிஸாரின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயம் - என்றார். (ஒ.5.இ)

### கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் முறைப்பாட்டுக்கு அமைவாக

## ஊடகங்களில் வெளியான செய்திக்கு ஊடகவியலாளரிடம் விசாரணை!

கிளிநொச்சி, மே 29
கிளிநொச்சியில் அமைந்துள்ள வடக்கு மாகாண தொற்றுநோயியல் மருத்துவமனையில் இடம்பெற்ற ஊழல்களை கணக்காய்வு அறிக்கையின் அடிப்படையில் செய்தியாக வெளிப்படுத்திய கிளிநொச்சி ஊடகவியலாளர்மீது கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ந. சரவணபவனால் இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கடந்த 23ஆம் திகதி அன்று மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக ஊடகவி...

பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.
வடக்கு மாகாண தொற்றுநோயியல் மருத்துவமனையில் இடம்பெற்ற ஊழல்கள் குறித்து கணக்காய்வு திணைக்களம் விசாரணை செய்து அறிக்கை சமர்பித்திருந்தது. இந்த அறிக்கையின் பிரதியை அடிப்படையாகக் கொண்டு குறித்த செய்தி பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்களில் வெளிவந்திருந்தது. இதற்கு எதிராகவே பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் முறைப்பாடு செய்யப்பட்டு, ஊடகவியலாளாரிடம் வாக்கு மூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








அரச வங்கிகள், தபாலகங்கள், மற்றும், நிதிகளைக் கையாளும் அரச நிறுவனங்கள் நேற்றுக் காலை 11 மணிவரை மாத இறுதிப்பணிகளுக்காக, மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளில் ஈடுபட்டிருந்தன. (ப-6)

# கிழமை நாள்களில் பகல் 2 மணிவரை தபாலகங்கள் இயங்கும்

மன்னார், மே 29

வரும் திங்கட்கிழமை முதல் கிழமை நாள்களில் தினமும் காலை 9 மணிமுதல் 2 மணி வரை தபாலங்கள் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச அறிவுறுத்தலுக்கு அமைய நேற்று வெள்ளிக் கிழமை தொடக்கம் அத்தியா வசிய தபால்சேவை சேவை கள் காலை 9மணி தொடக் கம் 2மணி வரையான காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட் டது.

மன்னார் அஞ்சல் அலுவல கத்தின் ஊடாக முதியோர் கொடுப்பனவு மற்றும் நோயா ளர்கள் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இந்த சேவை கிழமை நாள்க ளில் காலை 9 மணி தொடக் கம் 2 மணி வரை இடம் பெறும்.

கொடுப்பனவுகள் பெறுபவர் கள் சுகாதார நடைமுறைக ளைப் பின்பற்றி சேவைக ளைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ப-213)

# 'மாஸ்க்' அணியாது கைதானவருக்கு தொற்று; தொடர்புடைய பலருக்கும் அடுத்தடுத்து தொற்று

வவுனியா, மே 29




**வவுனியாவில் முகக்கவசம் அணியாத நிலையில் கைது செய்யப்பட்டு தொற்றாளராக இனங்காணப்பட்ட ஒருவருடன், தொடர்பைப் பேணிய 5 பேர் உட்பட 14 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.**

வவுனியாவில் இனங்காணப் பட்ட கொரோனாத் தொற்றா ளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற்றும் மருத் துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின.

அதில், பயணக்கட்டுப்பாடு தளர்வின் போது வவுனியா ஹொரவப்பொத்தானை வீதி யில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் சீராக முகக்கவசம் அணியாமையால் கைதுசெய் யப்பட்ட நிலையில் கொரோ னாத் தொற்று உறுதிசெய்யப் பட்டவருடன் தொடர்பைப் பேணிய குறித்த வர்த்தக நிலையத்தைச் சேர்ந்த 5 பேருக்கும், நந்திமித்திரகம பகுதியில் ஒருவருக்கும், இறம்பைக்குளம் ராணிமில் வீதியில் ஒருவருக்கும், வவு னியா சிறைச்சாலை கைதிகள் இருவருக்கும், வவுனியா பொலிஸார் ஒருவருக்கும், கோவில்புதுக்குளம் பகுதியில் ஒருவருக்கும், செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் ஒருவ ருக்கும், சுந்தரபுரம் பகுதியில் ஒருவருக்கும், இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள வத்தக நிலையம் ஒன்றில் பணியாற்றும் ஒருவருக்கும் என 14 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

இந்த தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத் துக்கு அனுப்பிவைக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது டன், அவர்களுடன் தொடர்பு டையவர்களை தனிமைப்படுத் தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, பயணக்கட்டுப் பாடு தளர்வின்போது முகக் கவசம் சீராக அணியாத நிலை யில் ஹொரவப்பொத்தானை வீதியில் இஸ்லாமிய கலாசார மண்டபம் முன்பாகவுள்ள பல்பொருள் வியாபார நிலை யத்தில் கடமையாற்றியபோது கைது செய்யப்பட்டவருடன் தொடர்புடைய 7 பேர் இது வரை தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-18)

# நடமாடுபவர்களைப் பிடிக்க கோப்பாயிலும் 'ட்ரோன்'

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவில், விமானப் படையின் உதவியுடன் "ட்ரோன்" கமரா ஊடான கண்காணிப்பு நடவடிக்கை நேற் றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில், இலங்கை விமானப் படையின் உதவியுடன் பயணத் தடை காலப்பகுதி யில் "ட்ரோன்" கமராவின் உதவியுடன் தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகளை மீறுவோரைக் கைதுசெய்யும் பணி கடந்த ஒரு வாரமாக முன்னெடுக்கப்படு கிறது. முதன் முறையாக யாழ்ப்பாணம் மாநகரில் கடந்த புதன்கிழமை கண்காணிப்புப் பணி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-26)

# கடற்றொழிலாளருக்கு பேசாலையில் பி.சி.ஆர்

மன்னார், மே 29

மன்னார் - பேசாலைப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடும் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை கள் செய்யப்பட்டு வருகின்றன.

மன்னார் பேசாலை பகுதியில் கடற்றொழிலில் ஈடுப டும் அனைத்து மீனவர்கள் மற்றும் கடல் சார் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற அனைவருக்கும் நேற்றுக் காலை எட்டு மணி முதல் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட்டன.

மன்னார் சுகாதாரப் பிரிவினரும், பொலிஸ் அதி காரிகளும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந்தக் கிராமத்தின் பிரதான தொழிலாக மீன்பிடி காணப்படுவதால் பெருமளவான மக்கள் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ள ஆர்வம்காட்டியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ப)





# வவு.பொலிஸ் நிலையத்தில் தொற்று நீக்கி விசிறல்

வவுனியா, மே 29

வவுனியாவில் கொரோனாத் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில், வவுனியா பொலிஸ் நிலையத்தில் தொற்று நீக்கும் செயற்பாடு நேற்று முன் னெடுக்கப்பட்டது.

வவுனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் சிலரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரி சோதனையில் 8 பொலிஸார் இரு தினங்களில் கொரோனாத் தொற் றாளர்களாக இனங்காணப்பட்ட நிலையில், பொலிஸ் நிலையத்தின் அனைத்து பிரிவுகளிலும், பொலிஸ் விடுதிகளிலும் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெ டுக் கப்பட்டிருந்தது.

வவுனியா நகரசபையின் தவிசாள ரின் ஆலோசனைக்கமைய நகர சபை பொது முகாமைத்துவ உதவியாளர் துரைராஜா சபேசன் தலைமையில் வவுனியா பொலிஸ் நிலையத்தின் சிறு குற்றத்தடுப்புப் பிரிவு, குற்றத்தடுப்பு பிரிவு, சிறுவர் பெண்கள் பிரிவு, சமூக நல்லுற வுப் பிரிவு, மது ஒழிப்பு பிரிவு, போக்குவரத்துப் பிரிவு, கேட்போர் கூடம், பொலிஸ் பொறுப்பதிகாரி அலுவலகம், பொலிஸ் சிறைக் கூடம், பொலிஸ் வளாகம் மற்றும் பொலிஸாரின் வாகனங்கள் என் பவற்றுக்கு தொற்று நீக்கும் மருந்துகள் விசிறப்பட்டு தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெ டுக்கப்பட்டது. (ப-18)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வாய்க்கால் புனரமைப்புத் தாமதத்தால் சிறுபோகத்தை ஆரம்பிக்க முடியாத நிலை

## வன்னேரிக்குளம் விவசாயிகள் வேதனை

**கிளிநொச்சி, மே 29**

**வாய்க்கால்களின் சீரமைப்பு வேலைகள் நிறைவுசெய்யப்படாததன் காரணமாக கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் 2ஆம் கட்ட சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ள முடியாதுள்ளது என்று விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.**



இது தொடர்பில் வன்னேரிக்குளம் விவசாயிகள் மேலும் தெரிவிக்கையில்; கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால், வன்னேரிக்குளத்தில் சிறுபோக நெற்செய்கை கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வன்னேரிக்குளத்தின் வாய்க்கால்களைச் சீரமைக்கும் பணிகளில் நீர்ப்பாசனத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. எனவே சிறுபோக நெற்செய்கையை இரு கட்டங்களாக மேற்கொள்வது என்பதன் அடிப்படையில் வேலைகள் நிறைவடைந்த ஒன்று தொடக்கம் 6ஆம் வாய்க்கால் வரையான பகுதிகளில், முதலாம் கட்ட சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வது, 2ஆம் கட்டமாக 7 தொடக்கம் 10ஆம் வாய்க்கால் வரையான பகுதிகளில், 15 நாள்கள் இடைவெளியில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது என முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆனால் முதலாம் கட்ட சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையில் 2ஆம் கட்ட சிறுபோகம் ஆரம்பிக்கப்படாதுள்ளது. இதற்கு பிரதான காரணம் வாய்க்கால்களின் வேலைகள் நிறைவுபெறாமல் உள்ளதே ஆகும். வன்னேரிக்குளத்தில் போதியளவு நீர் தற்போது உள்ளது. ஆனால் சிறுபோக நெற்செய்கையை ஆரம்பிப்பதற்கு, நீர்ப்பாசன வாய்க்கால்களில் வேலைகள் நிறைவுபெறாததன் காரணமாக நாம் 2ஆம் கட்ட வேலைகளை முன்னெடுப்பதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம். 2ஆம் கட்ட சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் நீர் வழங்கல் முயற்சிகளை தற்காலிகமாகவேனும் மேற்கொள்ள வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள பயணத் தடைகள் சிறுபோக நெற்செய்கையை பாதிக்கக் கூடாது. வன்னேரிக்குளம் சிறுபோக நெற்செய்கையின் 2ஆம் கட்டம் ஆரம்பமாவதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-13)

# இலங்கை வங்கியின் நடமாடும் சேவை புதுக்குடியிருப்பில்

முல்லைத்தீவு, மே 29

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இலங்கை வங்கியின் ஏ.ரி.எம் பணம் எடுக்கும் இயந்திரத்தின் நடமாடும் சேவை இன்று இரண்டு இடங்களில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பில் 9 கிராமங்கள் முடக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் பணத்தை எடுப்பதற்காக புதுக்குடியிருப்பு நகரப் பகுதிக்குச் செல்வதற்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மக்கள் தங்கள் அன்றாடச் செலவுக்காக வங்கியில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை வங்கியின் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

புதுக்குடியிருப்பில் இரணைப்பாலைச் சந்தியில் காலை 9 மணி தொடக்கம் 12.30 வரையும், குழந்தை யேசு கோவில் சந்தியில் 12.30 மணி தொடக்கம் 3 மணிவரையும் ஏ.ரி.எம் ஊடாக பணம் எடுக்கும் சேவை வழங்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் பொதுச் சுகாதார விதிமுறைப்படி இயந்திரத்தில் பணத்தை எடுத்துக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை கைவேலி தொடக்கம் தேராவில் பகுதி வரையான மக்கள், வங்கிக்குச் சென்று பணத்தை எடுக்கமுடியாத நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-19)

# 750 மண்மூடைகளை அடுக்கி வினாவோடை பாலம் பாதுகாப்பு

## தற்காலிக நடவடிக்கையே என்கிறது இடர் முகாமைத்துவ நிலையம்

கிளிநொச்சி, மே 29



கிளிநொச்சி பரந்தன் வினாவோடை பிரதான வீதியின் பாலத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பைத் தடுத்து, பாலத்தை தற்காலிகமாகப் பாதுகாக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் காணப்படும் பாலமானது இறுதியாக ஏற்பட்ட பெரும் மழைவீழ்ச்சி காரணமாக பாதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தால் பாலத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இராணுவத்தினரின் ஒத்துழைப்பும் பெறப்பட்டிருந்தது. பாலத்தில் வாகனங்கள் சென்றுவரும் சூழலில் உடைந்து விழும் அபாய நிலை ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் கள ஆய்வை மேற்கொண்டு, தற்காலிகமாக பாலத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. அண்ணளவாக 30 அடி நீளம் கொண்ட குறித்த பாலமானது வெள்ளத்தால் உடைப்பெடுக்கும் ஆபத்தான நிலை காணப்பட்ட நிலையில் ஏற்கனவே 2 ஆயிரத்து 500 மண்மூடைகள் அடுக்கப்பட்டு ஏற்படவிருந்த அனர்த்தம் நிறுத்தப்பட்டிருந்தது என்றும், தற்போது ஏற்பட்டுள்ள உடைவை பாதுகாப்பதற்காக 750 பைகளில் மண் நிரப்பப்பட்டு பாலத்தைப் பாதுகாப்பதற்கான தற்காலிக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் மாவட்ட இடர் முகா மைத்துவ நிலையத்தினர் தெரிவித்தனர். கிராமிய பாலங்கள் திட்டத்தின் கீழ் குறித்த பாலத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்ட முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் பாலம் அபிவிருத்தி செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படும் என நம்புகிறோம் என மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தினர் மேலும் தெரிவிக்கின்றனர். (ப-316)



நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வைகாசி விசாகத்தை முன்னிட்டு சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (ஐ-159)

# படையெடுக்கும் யானைகளால் பூநகரி பிரதேச மக்கள் அச்சம்

கிளிநொச்சி, மே 29

யானைகளால் தினமும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம் என்று கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

பூநகரியின் 10ஆம் கட்டை தொடக்கம் ... யானைகளின் நடமாட்டம் கூடுதலாகக் காணப்படுகின்றது. வீதியின் இரு பக்கங்களிலும் நடப்பட்டிருந்த தென்னைகள் முழுமையாக யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன. பூநகரி வாடியடிச் சந்தியில் இருந்து முழங்காவில் செல்லும் வீதியில் மாலை 4 மணிக்கே யானைகள் வருகின்றன. குமுழமுனை, ... யானைகள், தென்னை போன்ற பயன் தரும் மரங்களை அழிக்கின்றன. ஜெயபுரம் கிராமத்தில் இருந்து வன்னேரிக்குளம் செல்லும் வீதிகளில் இவ்வாறு யானைகளின் தொல்லை அதிகமாகக் காணப்படுகின்றது. கரியாலை நாகபடுவான் மற்றும் பல்லவராயன்கட்டு சோலை ஆகிய பகுதிகளில் யானைக ... போது குடமுருட்டிக்குளம் மற்றும் கரியாலைநாகபடுவான் ஆகிய குளங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறு போக நெற்செய்கைகள் இந்த யானைகளால் பெரும் அழிவுகளை எதிர்கொண்டுள்ளன. எனவே பூநகரி பிரதேசத்தில் யானைகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சகல கிராமங்களுக்கும் விரைவில் தடுப்பூசிகள்

## அச்சம் வேண்டாம் என்கின்றார் நாமல்

**கொழும்பு, மே 29**
**கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள், நாட்டிலுள்ள சகல கிராமங்களிலும் முன்னெடுக்கப்படும். எனவே மக்கள் வீணாக அச்சப்படாமல், பொறுமையாக இருந்து தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும்**

இவ்வாறு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது சுகாதார அமைச்சால் பரிந்துரைக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு மக்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்படுகின்றன. எனவே மக்கள் தமக்கான சந்தர்ப்பம் வரும் வரை பொறுமையுடன் இருக்க வேண்டும். மாறாக குழப்பத்தை விளைவித்தால், தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாது- என்றார். (எ-4)

## கப்பல் பணியாளர்களும் தடுப்பூசிக்கு விண்ணப்பம்

கொழும்பு,மே 29
தமக்கும் கொரோனாத் தடுப்பூசிகளை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விடுமுறைக்காக இலங்கை வந்துள்ள கப்பல் பணியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
விடுமுறைக்காக இலங்கைக்கு வருகைதந்துள்ள குறித்த பணியாளர்கள், விடுமுறைக் காலம் நிறைவடைந்தும், மீண்டும் பணிகளுக்குச் செல்ல முடியாதுள்ளனர்.
அத்துடன் கப்பல் பணிக்காக மீண்டும் செல்ல வேண்டுமாயின், கொரோனாத் தடுப்பூசி செலுத்தியிருப்பது அவசியம் என்று சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அறிவித்துள்ளன.
எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-4)

## இரண்டு வாரங்களில் தொற்றாளர் குறைவர்

### மருத்துவர் பிரசாத் தெரிவிப்பு

கொழும்பு, மே 29
பயணக் கட்டுப்பாட்டு விதிமுறை மற்றும் சுகாதார நடைமுறைகளை மக்கள் முறையாகப் பின்பற்றினால் இன்னும் இரண்டு வாரங்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையக்கூடும் என்று அரச மருத்துவ அதிகாரி சங்கத்தின் பிரதிநிதி மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் மூலம் கொரோனாத் தொற்று பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை அவதானித்துள்ளோம். அதனால் இன்னும் 10 நாள்களில், நாளாந்தம் பதிவாகும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.
எனவே, பயணக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றினால் இன்னும் இரண்டு வாரங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையும்- என்றார். (எ-4,44)

## பயணக் கட்டுப்பாடுகளின் பின் தொற்றாளர்கள் குறைவடைவர்

### இராஜாங்க அமைச்சர் கணிப்பு




கொழும்பு, மே 29
நாட்டில் நடைமுறையில் உள்ள பயணக்கட்டுப்பாடுகள் நிறைவடைந்த பின்னர், கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் கடந்த இரண்டு வாரங்களுக்கும் அதிகமாக நாளாந்தம் இரண்டாயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.
இந்த நிலையில் எதிர்வரும் ஜூன் மாதம் 14 ஆம் திகதிக்குப் பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையக் கூடும்.
பயணக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால், 14 நாள்கள் நிறைவடைந்ததன் பின்னர், கொரோனாத் தொற்று பரவுதல் குறைவடையும் என்று எதிர்பார்க்கின்றோ- என்றார். (எ-4)



## 829 பேர் கைது

கொழும்பு,மே 29
நாட்டில் கொரோனாக் கால தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் மேலும் 829 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (எ-4)

## உயிரிழப்புக்களை உறுதிப்படுத்த மருத்துவர்களுக்கு சுற்றறிக்கை



கொழும்பு,மே 29
உயிரிழப்புக்களை உறுதிப்படுத்துவது தொடர்பில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால், சகல மருத்துவர்களுக்கும் விசேட சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மருத்துவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பரிந்துரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
கொரோனாத் தொற்றுக்குரிய அறிகுறிகளுடன் ஒருவர் உயிரிழந்தார் என்பதை மருத்துவ ரீதியாக உறுதிப்படுத்துவது அவசியம்.
நீண்டகால நோய்க்கு உள்ளான ஒருவர் உயிரிழந்தால், அவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டாலும், அந்த இறப்பை தனியாக கணக்கிட்டு, அவரது மருத்துவ அறிக்கையை பரிசோதித்த பின்னர் உறுதிப்படுத்த வேண்டும்.
அத்துடன் கொரோனாத் தொற்றே அவரது இறப்புக்கு பிரதான காரணமென உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே, அந்த இறப்பை உறுதிப்படுத்த வேண்டும்.
கொரோனாத் தொற்றின் இறப்பை உறுதிப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளைக் கடைப்பிடிப்பதுடன், அவரது இறப்புச் சான்றிதழில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தார் என்று குறிப்பிடுவது அவசியமாகும்.
சிலரது இறப்பின் பின்னர் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனையின் போது, சம்பந்தப்பட்ட நபர் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர் என்று உறுதிப்படுத்தப்பட்டால், அவரது இறப்புக்கு கொரோனாத் தொற்றே பிரதான காரணம் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வேண்டும்- என்றுள்ளது. (எ-4)

## சஜித்துடன் கூடிய 216 உறுப்பினர்கள்



கொழும்பு,மே 29
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இறுதியாக நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்ற போது, 216 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூடியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனையடுத்து நாடாளுமன்றிலுள்ள எதிர்க்கட்சி அலுவலகம் மூடப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் உள்ளிட்ட பணியாளர்கள் 10 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் இறுதியாக இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வுகளில் எத்தனை உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர் என்ற தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
அந்த வகையில் மே மாதம் 18 ஆம், 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்றிருந்த உறுப்பினர்கள் தொடர்பான, புள்ளி விவரங்களை நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் வெளியிட்டுள்ளது. அதற்கமைவாக மே 18 ஆம் திகதி 202 நாடாளுமன்ற உறுப்பினர்களும் (90 வீதம்),மே 19 ஆம் திகதி 198 உறுப்பினர்களும் (88 வீதம்), மே 20 ஆம் திகதி 216 நாடாளுமன்ற உறுப்பினர்களும் (96 வீதம்) அமர்வுகளில் பங்கேற்றிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக நகரத் திட்டத்தை அவதானிக்கின்றது இந்தியா

கொழும்பு,மே 29

**சீனா ஆதரவுடன் முன்னெடுக்கப்படவுள்ள, கொழும்பு துறைமுக நகர திட்டத்தை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என்று இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தத் திட்டத்துக்கு இலங்கை நாடாளுமன்றில் பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ளது. எனினும் இதனை அங்குள்ள எதிர்க் கட்சிகள் எதிர்த்துள்ளன.

இந்தியாவிலிருந்து 300 கிலோ மீற்றர் தொலைவிலேயே இந்தத் திட்டம் உருவாகின்றது. இந்தத் திட்டத்தின் மூலம் யாருக்கு நன்மை என்ற கேள்விகளும் உள்ளன.

இலங்கையர்கள் வெளியிட்டுள்ள கரிசனைகளுக்கு, ஜனநாயக கட்டமைப்புக்குள்ளேயே தீர்வைக் காண வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

இது தொடர்பில் வேறு விடயங்கள் இருக்குமானால் வெளிப்படைத் தன்மை மற்றும் நிதிசார் பொறுப்பு போன்றவற்றின் கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டும்.

மேலும், அது இலங்கையின் இறைமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டை மதிப்பதாக இருக்க வேண்டும்.

அத்துடன் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை அங்கீகரிக்கவேண்டும். எங்கள் நாட்டுக்கு அருகில் (இந்தியா) நிகழும் எந்த விடயம் குறித்தும் நாங்கள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றோம்.

இது வர்த்தக நோக்கத்தை அடிப்படையாகக்கொண்ட முயற்சியாகவிருந்தால் நாங்கள் எதனையும் தெரிவிக்க வேண்டியதில்லை. ஆனால் வேறு விடயங்கள் காணப்பட்டால் நாங்கள் நிச்சயமாக ஆராய வேண்டும் - என்றுள்ளது. (எ-4)



# முக்கிய கட்டடங்களை விற்கத் தயாராகும் அரசு

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, மே 29

கொழும்பில் அஞ்சல் அலுவலகம் மற்றும் வெளிவிவகார அமைச்சக கட்டடம் ஆகியவை அமைந்துள்ள முக்கிய நிலங்களை விற்பனைசெய்வதற்கு அரசு தயாராகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

போலி தேசபக்தியுடைய அரசு வெளியுறவு அமைச்சக கட்டடம், பொது தபால் அலுவலகம், கிராண்ட் ஓரியண்டல் ஹொட்டல், யார்க் கட்டடம், கபூர் கட்டடம், தாமரை கோபுரத்தை சுற்றியுள்ள இடங்கள், கொழும்பு ஹில்டன் ஹொட்டல் மற்றும் கிரைண்ட் ஹையாட் கட்டடம் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கான, அமைச்சரவை அனுமதியைப் பெற்றுள்ளது.

இந்த நிலங்கள் கொழும்பு துறைமுக நகரத்துக்கு அருகில் உள்ளன. எனவே, ஒரு நாடு என்ற வகையில், கொழும்பு துறைமுக நகரத்துக்காக ஏற்றுக்கொள்ள முடியாத சட்டங்களை அறியாத முதலீட்டாளர்கள் என்று அழைக்கப்படும் ஒரு குழுவுக்கு, இந்த வளங்கள் எந்த வெளிப்படைத்தன்மையுமின்றி விற்கப்படுகின்றனவா என்று நாம் விழிப்பாக கேள்வி எழுப்ப வேண்டும்.

நாட்டில் ஒரு அங்குல நிலத்தையும் விற்க மாட்டேன் என்று கூறும் அரசு, எந்தவொரு கொள்கையும் இல்லாமல் ஒரே நேரத்தில் இவ்வளவு பெரிய மதிப்புமிக்க நிலங்களை விற்பனைசெய்யப் போகின்றது - என்றார். (எ-4)

# தடைப்பட்ட பகுதிகளுக்கு மின் வழங்கல் பூர்த்தி

கொழும்பு, மே 29

நாட்டின் பல பகுதிகளிலும் இயற்கை இடர் காரணமாக தடைப்பட்டிருந்த மின்விநியோகம் நேற்றுமுதல் முழுமையாக சீரமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடும் காற்றுக் காரணமாக நாடு முழுவதும் ஒரு லட்சத்து 77 ஆயிரம் வீடுகளுக்கான மின் விநியோகம் பாதிக்கப்பட்டது. அதிகளவில் மாத்தளை, கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களே பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,இ)

## நுரைச்சோலையில்

# பராமரிப்பு வேலைகளுக்காக மின்உற்பத்தி நிறுத்தப்பட்டது

கொழும்பு, மே 29

நுரைச்சோலை மின்உற்பத்தி நிலையத்தில் பராமரிப்பு வேலைகளுக்காக மின்பிறப்பாக்கி ஒன்று நேற்று நிறுத்தப்பட்டது என்று இலங்கை மின்சார சபையின் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இலங்கையில் அண்மையில் பெய்த மழை காரணமாக 200 ஜிகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யமுடியும். கலப்புமுறையிலான மின் உற்பத்திக்கு அலகு ஒன்றுக்கு 2 ரூபாவும், டீசல் மூலமான மின் உற்பத்திக்கு அலகு ஒன்றுக்கு 30 ரூபாவும் செலவாகுகிறது என அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ.5,இ)

# தடுப்பூசி வழங்கலில் தலையீடு; ஜனாதிபதி கோத்தபாய விசனம்



கொழும்பு, மே 29

பொதுமக்களுக்கான தடுப்பூசி விநியோகத்தில் தலையீடு செய்த ஆளும் கட்சியின் மொறட்டுவ மாநகர மேயர் தொடர்பில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச விசனம் தெரிவித்துள்ளார்.

கொவிட் தடுப்புச் செயலணியின் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

'தடுப்பூசி ஏற்றலுக்கான இடங்களை விஞ்ஞான ரீதியிலேயே தெரிவுசெய்கின்றோம். சுகாதாரத் துறையினர் வழங்கும் தரவுகளையும் கவனத்தில் எடுக்கின்றோம். அப்படியிருந்தும் நேற்றைய (நேற்றுமுன்தினம்) நிகழ்வு அசிங்கமானது. இவ்வாறான விடயங்களை நடக்க அனுமதிக்காதீர்கள்' என்று ஜனாதிபதி கோத்தபாய குறிப்பிட்டுள்ளார். (ஒ.5,இ)

# உலக வங்கியின் பிரதிநிதிகள் இலங்கையில் களப்பயணம்

கொழும்பு, மே 29

உலக வங்கியால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளில், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பாக, வங்கியின் பிரதிநிதிகள் நேரடியாக ஆராய்ந்து வருகின்றனர்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக வங்கியின் விசேட பிரதி நிதிகள், நாட்டின் பல பகுதிகளுக்கும் நேரடிக் களப்பயணம் மேற்கொண்டுள்ளனர் என்று ஆரம்ப சுகாதார சேவைகள் அமைப்பின் செயற்றிட்டப் பணிப்பாளர் மருத்துவர் ஜெய சுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

2019 ஆம் ஆண்டு இலங்கையில் 50 மருத்துவமனைகளை மேம்படுத்துவதற்கு உலக வங்கியால் செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

இதனூடாக வெளிநோயாளர் பிரிவில் நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கும், நோய்க்கான காரணத்தைக் கண்டறிந்து, அவர்களுக்கான வழிகாட்டல்கள் மற்றும் நோய்களை தாமதமின்றி அடையாளம் காண்பதற்கான பரிசோதனைகள் உள்ளிட்ட சமூக அளவிலான சேவைகளும் செயற்படுத்தப்பட்டன.

அத்துடன் 2020 ஆம் ஆண்டு 150 மருத்துவமனைகள் மேம்படுத்தப்பட்டன. இது தொடர்பில் கண்காணிப்பை மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் குழுவினர் உலக வங்கிக்கு அறிக்கை வழங்கிய பின்னர், 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அடுத்த நிதி ஒதுக்கீடு வழங்கப்படும் - என்றார். (எ-4)

# படைத்தலைமையகத்தில் சிப்பாய் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம் பலாலி பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் பலாலி படைத்தளத்தில் உள்ள விகாரை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இரு பிள்ளைகளின் தந்தையான, வத்தேகம பகுதியைச் சேர்ந்த ரஞ்சுல பண்டார (வயது-36) என்ற இராணுவச் சிப்பாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இராணுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சிப்பாய்க்கு வெளிநாட்டு பெண் ஒருவருடன் தொடர்பு இருந்தது என்றும், அந்தப் பெண் அண்மையில் அவருடன் தொடர்பைத் துண்டித்திருந்தார் என்றும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என இராணுவத் தரப்பு தெரிவித்தது.

இறந்தவரின் உடல் பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ.5,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்புள்ளை வர்த்தகர்கள் 1,610 பேருக்கு தடுப்பூசி

கொழும்பு, மே 29
தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தைச் சேர்ந்த ஆயிரத்து 610 வர்த்தகர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசி நேற்றுமுன்தினம் செலுத்தப்பட்டது என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
தம்புள்ளை பொருளாதார நிலையத்தில் கொரோனாத் தொற்றுப் பாதிப்பு அதிகம் ஏற்பட்டதால், பல தடவைகள் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது. தற்போது தடுப்பூசித் திட்டம் காலி, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அதற்கமைவாக ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், தொற்றுநோயியல் பிரிவின் பரிந்துரைக்கு அமைவாக வர்த்தகர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# ரூபா 91 கோடியை ஏப்பமிட்டவர் கைது

கொழும்பு, மே 29
மஹரகமவிலுள்ள தனியார் வங்கியொன்றில் 910 மில்லியன் ரூபா நிதி மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
தனியார் வங்கியின் பணிப்பாளர் சபையிலிருந்த ஒருவரே இவ்வாறு நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.
பிபிலையைச் சேர்ந்த 44 வயதான குறித்த நபர் 2017 ஆம் மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
சந்தேகநபர் கங்கொடவில நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (எ-4)



# நீர்கொழும்பு கடற்கரையில் இராணுவத்தினர் சிரமதானம்

கொழும்பு,மே 29
கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் விபத்துக்குள்ளான கப்பலிலிருந்து வெளியான கழிவுகள் நீர்கொழும்பு கடற்கரையில் கரையொதுங்கியுள்ளதால், அவற்றை அகற்றுவதற்கு 300 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.
இராணுவத்தினரின் பீரங்கி படை, வெடி குண்டு அகற்றும் படை மற்றும் ட்ரோன் படை உள்ளிட்டவை இப்பணியில் ஈடுபட்டுள்ளன என்று இராணுவத்தின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
அதற்கமைவாக நீர்கொழும்பு கடற்கரையில் 6 கிலோ மீற்றர் வரை இராணுவத்தினரால் தூய்மைப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-4)

# கப்பல் தீப்பற்றியதால் மீன்வளத்துக்கு பாதிப்பு

## நீர்வள ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிப்பு

**கொழும்பு, மே 29**
**கொழும்பு துறைமுகத்துக்கு அருகில், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால், மீன்வளத்துறைக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் சாத்தியம் உள்ளது என்று தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் நவரத்னராஜா தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்;
கொழும்பு துறைமுகத்தின் வட மேல் திசையில் 9.5 கடல் மைல் தொலைவில் தீப்பற்றிய கப்பலின் கழிவுகள் மற்றும் வெடித்து சிதறிய கொள்கலன்கள் நீர்கொழும்பு கடற்பகுதியில் கரையொதுங்கியுள்ளன.
கப்பலில் இருந்து வெளியேறிய எரிபொருள்கள் கடலில் கலந்துள்ளமையால் ஏற்படக்கூடிய அபாயம் மற்றும் கடலுணவுகளை உட்கொள்வதால் ஏற்படும் பாதிப்பு என்பவை தொடர்பில், தற்போது வரை கிடைக்கப் பெற்றுள்ள சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பரிசோதனைளை முன்னெடுத்துள்ளோம்.
கப்பலில் இருந்து வெளியாகியுள்ள பிளாஸ்ரிக் உற்பத்தி மூலப் பொருள்கள் பெருமளவில் நீர் கொழும்பு பிரதேசத்தின் கடற்பரப்பில் கரையொதுங்கியுள்ளன. இந்த மூலப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படு கின்றன.
இந்த மூலப்பொருள்களை மீன்கள் உண்பதால் அவை இறக்க நேரிடும். தற்போதைய நிலைமைக்கு அமைய சமுத்திரத்துக்கும், கடல் வாழ் உயிரினங்களுக்கும் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் மதிப்பீடுசெய்ய முடியாது. இருப்பினும் மீன்வளத்துறைக்கு பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகளவில் காணப்படுகின்றது -என்றார். (எ-4)

# அரியாலையில் கடலட்டை பண்ணை


## கடற்றொழில் அமைச்சர் ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 29
அரியாலை பிரதேசத்தில் கடலட்டை பண்ணை அமைக்க முடியுமா என்பது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.
அங்குள்ள குய்லான் கடலட்டை குஞ்சு இனப்பெருக்கப் பண்ணையை பார்வையிட்டதுடன், கடலட்டை குஞ்சுகளின் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தினார்.
மேலும் அரியாலை பகுதியில் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்கு ஆர்வம் செலுத்துபவர்களுடனும் அவர் கலந்துரையாடல் நடத்தினார்.
'கடலட்டை பண்ணைகளை அதிகரிப்பதனூடாக நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் அதேநேரம், எமது கடற்றொழிலாளர்களது வாழ்வியலிலும் சிறந்த பொருளாதார ரீதியான மாற்றங்களை கொண்டுவர முடியும். அதேவேளை கடலட்டை பண்ணைகளை அமைப்பதால் பாரம்பரிய தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்ற அச்சம் சிலரிடம் காணப்படுகின்றது. எமது கடற்றொழிலாளர்களின் நலன்களும் விருப்பங்களும் பாதிக்கப்படுவதையோ, அது தொடர்பான நடவடிக்கைகளையோ ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை' என்று கடற்றொழில் அமைச்சர் இங்கு தெரிவித்தார். (ஒ-இ)

# கப்பல் நிறுவனத்திடம் நஷ்டஈடு கோரப்படும்

## சுற்றாடல் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மே 29
கொழும்பு துறைமுகத்துக்கு அருகாமையில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனத்திடமிருந்து, நஷ்டஈடு கோரப்படும் என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
குறித்த கப்பல் தீப்பற்றியதால், இலங்கையின் கடல் வளம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. காற்று மாசுறுதலும் ஏற்பட்டுள்ளது. இந்தக் கப்பலில் இருந்த இரசாயனப் பொருள்கள் பாணந்துறை, புத்தளம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய கடற்கரையோரங்களில் கரையொதுங்கி வருகின்றன.
இதனால் பொதுமக்கள் மிகுந்த அவதா



இருந்து கரையொதுங்கும், கடலில் விழுந்துள்ள இரசாயனப் பொருள்களை சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக கப்பல் நிறுவனத்திடமிருந்து நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்கும் - என்றார். (எ-4)

# சட்ட வரைவுக்கு ஆதரவு விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு,மே 29
கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் சட்ட வரைவுக்கு ஆதரவாக வாக்களித்த, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படும் என்று கட்சியின் செயலாளர் நாயகம் எஸ்.சுபைர்தீன் தெரிவித்துள்ளார்.
சட்ட வரைவுக்கு ஆதரவளித்தமைக்காக, கட்சியின் யாப்புக்கு அமைவாக, இருவரும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில் அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக, ஒழுக்காற்றுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
இந்தக் குழுவின் தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி ருஷ்தி ஹபீப்பும், குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக கலாநிதி அனீஸ், சட்டத்தரணி எம்.ஏ.அன்சில் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
இந்தக் குழு மிக விரைவில் ஒழுங்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் ஆகிய இருவருமே கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொரோனாவுக்கான தடுப்பு மருந்து இலங்கையில் தயாரிப்பது சிறந்தது

## மருத்துவ நிபுணர் ஆலோசனை

கொழும்பு, மே 29

**கொரோனாத் தொற்றுக்கான தடுப்பு மருந்தை, இலங்கையில் தயாரிப்பது சிறந்ததொரு நகர்வாகும். இரண்டாம் தலைமுறைக்கு தடுப்பூசி மருந்தை கண்டறிய வேண்டிய தேவை ஏற்படலாம்.**

இவ்வாறு சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறையின் பணிப்பாளரான மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த தயாரிக்கப்பட்டுள்ள சகல தடுப்பூசிகளும், சீனாவில் முதன்முதலாக அடையாளம் காணப்பட்டதாக கூறப்படும் வைரஸைக் கட்டுப்படுத்த தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகளாகும்.

தற்போது கொரோனா வைரஸ் உருமாறி, பிரிட்டன், இந்தியா, பிரேஸில் மற்றும் இத்தாலி போன்ற நாடுகளுக்குரிய வைரஸ்களாக மாறி மாறி பரவி வருகின்றன. எனவே இரண்டாம் தலைமுறை தடுப்பு மருந்தை கண்டறிவதே சிறந்தது.

கொவிட் 19 குடும்பத்தைச் சேர்ந்த 70 வகையான வைரஸ்கள் பரவியுள்ளன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அவ்வாறு இருக்கையில் சீன வைரஸைக் கட்டுப்படுத்தும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள் மூலமாக ஏனைய வைரஸ்களைக் கட்டுப்படுத்த முடியுமா? என்ற ஐயப்பாடு உள்ளது.

எனவே இலங்கையில் தடுப்பூசிகளை உற்பத்திசெய்ய முடியுமெனில், அது மிகச்சிறந்த நகர்வாகும். உலகில் பல நாடுகள் தமக்கான தடுப்பூசிகளை உற்பத்தி செய்துகொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன - என்றார். (எ-4)



## கொரோனாவை ஒழிக்கும் தூய தேங்காய் எண்ணெய்

### பிலிப்பைன்ஸ் பேராசிரியர் தகவல்

கொழும்பு, மே 29

அறிகுறிகள் தென்படும் கொரோனாத் தொற்றாளர்களை, தூய தேங்காய் எண்ணெய் குணப்படுத்தும் என்று பிலிப்பைன்ஸின் அட்டெனியோ டி மணிலா பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் பேராசிரியர் ஃபேபியன் டெரிட் தகவல் வெளியிட்டுள்ளார்.

லகுனாவிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையம் மற்றும் பொது மருத்துவமனையில் 57 நோயாளிகளிடம் மேற்கொண்ட ஆய்வில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தூய தேங்காய் எண்ணெயிலுள்ள சேர்மங்கள், கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் உள்ளவர்களின் உடலில் வைரஸின் அளவை 60 தொடக்கம் 90 வீதம் வரை குறைக்கும். எனினும் வைரஸின் லேசான அறிகுறிகளைக் கொண்ட நோயாளிகள் மட்டுமே இதனைப் பயன்படுத்த முடியும்.

அதற்கமைவாக லேசான அறிகுறிகளைக் கொண்ட நோயாளிகள் உணவு உட்கொண்ட பின்னர், ஒரு நாளைக்கு மூன்று முறை 2 தேக்கரண்டி தூய தேங்காய் எண்ணெய்யைப் பருக வேண்டும். இது தற்போதைய சோதனைகளில் பரிந்துரைக்கப்பட்ட அளவு. இது தொடர்பில் இன்னும் ஆராய்ச்சிகள் இடம்பெறுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## முகக்கவசம் அணியாது 'வீல்பரோவில்' பொருள்களை கொண்டுசென்றவருக்கு பிணை

கொழும்பு,மே 29

பொது இடத்தில் முகக்கவசத்தை அணியாத குற்றச்சாட்டில், கைதுசெய்யப்பட்ட அளுத்கம தர்கா நகரைச் சேர்ந்த நபரை, களுத்துறை நீதவான் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்தது.

நாட்டில் நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாடு கடந்த 25 ஆம் திகதி தளர்த்தப்பட்டபோது, அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக சென்ற குறித்த நபர், பொருள்களுடன் வீடு திரும்பியபோது முகக்கவசம் அணிந்திருக்கவில்லை. இது தொடர்பான வீடியோக் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியிருந்தன.

அதனையடுத்து கைதுசெய்யப்பட்ட நபர், களுத்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபரை ஒரு இலட்ச ரூபா சரீரப் பிணையில் நீதிமன்று விடுவித்துள்ளது. (எ-4)

## கார்ட்போட்டில் சவப்பெட்டிகள்

கொழும்பு,மே 29



கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களை வைப்பதற்காக, கார்ட்போட் அட்டையால் தயாரிக்கப்பட்டுள்ள சவப்பெட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கல்கிஸை நகர சபை இதனை அறிமுகப்படுத்தியுள்ளது.

அப்புறப்படுத்தப்பட்ட காகிதம் மற்றும் கார்ட்போட் அட்டைகளை மறுசுழற்சி செய்வதன்மூலம், இந்தப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன என்று நகரசபை உறுப்பினர் பிரியந்த சஹபந்து தெரிவித்துள்ளார்.

இதன் ஊடாக, சவப்பெட்டிகளின் உற்பத்திக்காக வெட்டப்படும் மரங்கள் காப்பாற்றுவதுடன், சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்க முடியும்.

ஒரு சவப்பெட்டி சுமார் பத்தாயிரம் ரூபாவுக்கு விற்பனைசெய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## கொரோனா நெருக்கடிகளுக்கு சுகாதார அமைச்சரே காரணம்

### பதவி விலக்கக் கோருகின்றது மருத்துவ அதிகாரிகள் போரம்

கொழும்பு,மே 29

நாட்டில் கொரோனாத் தொற்றால் ஏற்பட்டுள்ள சகல நெருக்கடிகளுக்கும், தற்போதுள்ள சுகாதார அமைச்சரே காரணம். எனவே அவரை பதவி விலக்கி, புதிய அமைச்சர் ஒருவரை நியமிக்கக்கூடிய சூழ்நிலையை ஜனாதிபதி உருவாக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கை மருத்துவ அதிகாரிகள் போரத்தின் தலைவர் மருத்துவர் ருக்சான் பெலானா கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் கொரோனா பெருந்தொற்று நெருக்கடியின் போது, சுகாதாரத் துறையை உரிய விதத்தில் நிர்வாகம் செய்யாதமைக்கான பொறுப்பை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியே ஏற்க வேண்டும்.

சுகாதார அமைச்சின் முழு நடவடிக்கைகளும் தற்போது குழப்பத்தில் உள்ளன. இவற்றைச் சரிசெய்வதற்கான உடனடி நடவடிக்கைகளை அரசு எடுக்காவிட்டால் விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

சுகாதார அமைச்சர் சுகாதாரப் பணியாளர்களுக்குத் தலைமைத்துவத்தை வழங்காமல், அவர்கள் மத்தியில் பிரிவினையை உருவாக்கியுள்ளார். ஒரு தொழிற் சங்கம் தெரிவிப்பதை மாத்திரம் ஏற்றுக் கொள்கின்றார். உரிய துறைகளுடன் இணைந்து செயற்படவில்லை. அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளை ஐக்கியப்படுத்தத் தவறியுள்ளார். உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் போலியான நம்பிக்கைகளை ஊக்குவித்துள்ளார். கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் ஊழலுக்கு வழி வகுத்துள்ளார். தொழிலாளர்களை அரசியல் ரீதியில் பழிவாங்கியுள்ளார் - என்றார். (எ-4)

# பொருள்கள் விநியோகத்துக்கு 8,000 நடமாடும் வாகனங்கள்

கொழும்பு, மே 29

கொழும்பு மாவட்டத்தில் உணவு உள்ளிட்ட அத்தியவசிய பொருள்களை விநியோகிப்பதற்காக, 8 ஆயிரம் நடமாடும் வாகன சேவைகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன என்று கொழும்பு மாவட்டச் செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாட்டில், இந்த வாகனங்களுக்கு மாத்திரமே வீதிகளில் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட பாதைகளில் மாத்திரமே இந்த வாகனங்கள் பயணிக்க முடியும். அதேவேளை ஆலோசனைகளைப் பின்பற்றாத வாகனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கொழும்பு மாவட்டத்தில் 577 கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் மக்களுக்கு, இவற்றின் ஊடாக பொருள்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தங்களது பிரதேசங்களுக்கு இந்த வாகனங்கள் வரவில்லை என்றால், அது தொடர்பில் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்க முடியும். அல்லது 0112 369139 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியும்.

அத்தியாவசியப் பொருள்களை கொழும்பு மக்களுக்கு விநியோகிப்பதற்காக தயார் படுத்தப்பட்டுள்ள இந்த வாகனங்களில் சில நடைமுறைப் பிரச்சினைகள் ஏற்பட்டாலும், முடிந்தளவு பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்கவே முயற்சிக்கின்றோம் - என்றார். (எ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

மீன்வாடியில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டார். கிளைமோர் குண்டு உள்ளிட்ட வெடிபொருள்களுடன் கடந்த ஆண்டு ஜனவரியில் இராணுவ சிப்பாய் ஒருவரைத் தாக்கினார் என்றும் பின்னர் தலைமறைவாகி இருந்தார் என்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் குற்றச்சாட்டுக்களை அடுக்குகின்றனர். பின்னர் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் விடு விக்கப்பட்டி ருந்தார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து கிளைமோர் வெடிகுண்டு மற்றும் அதற்குரிய சார்ஜர் ஆகியவை உள்ளிட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கூறுகின்றனர். பயங்கரவாத விசாரணைப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின்படி அவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-26)

## மருத்துவமனைக்கு...

தெரிவித்தார். அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: நோயாளி ஒருவரை மருத்துவமனையில் சேர்க்கவேண்டுமெனில், எந்தவோர் அனுமதியும் தேவையில்லை. அதேபோல், மருந்தகங்கள் திறக்கப்பட்டிருக்கும்.

**வாகனங்கள் மூலம் நடமாடும் சேவை**

களை முன்னெடுக்கும் தரப்பினருக்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும். பொருள்கள் விநியோக சேவையை முன்னெடுப்பதற்கு 31 ஆம் திகதிவரை வழங்கப்பட்ட அனுமதி 7 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே, அதனைப்புதுப்பிக்கவேண்டியதில்லை. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் விண்ணப்பிப்பது தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டல் அறிக்கையை விநியோகம் செய்வதற்கு புத்தக விற்பனை நிலையங்கள் முன்வந்தால் அதற்கு அனுமதி வழங்கப்படும்.

**மத்திய நிலையங்கள் திறப்பு**

29, 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் பொருளாதார மத்திய நிலையங்கள் திறக்கப்படும். மரக்கறி மற்றும் உணவு வகைகளை கொண்டுசெல்பவர்கள், தாம் அந்தப் பணியில்தான் ஈடுபடுகின்றோம் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணத்துடன் பயணித்தல் அவசியம்.

**ஊசி போட போகலாம்**

ஏதேனும் ஒரு பகுதியில் தடுப்பூசி ஏற்றப்படுமானால், அதனைப் பெறுவதற்கு தகுதிபெற்றவர்கள், அனுமதிப்பத்திரமின்றி அங்கு செல்ல முடியும்.

**நிறுவனக் கடிதம்**

அத்தியாவசிய சேவையை முன்னெடுப்பவர்கள் ஆள் அடையாள அட்டைக்கு புறம்பாக, நிறுவன பிரதானியின் அனுமதிக் கடிதத்தையும் வைத்திருக்க வேண்டும். 'ஸ்மாட்' அலைபேசியிலும் அதனை வைத்திருக்கலாம். அத்தியாவசிய சேவை என்ற போர்வையில் இடம் பெறும் முறைகேடுகளைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை"- என்றார். (த-44)

## 5000/=...

வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணத் தடையால் அன்றாட வருமானங்களை இழந்த குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். அரச பணியாளர்களுக்கு இது வழங்கப்படாது. மேலும் நீருக்கான கட்டணங்களில் எந்தச் சலுகையும் வழங்கப்படாது. கொடுப்பனவை தாமதமாகச் செலுத்த முடியும் என்பதுதான் வழங்கப்படும் ஒரேயொரு சலுகை' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 5 ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை ஜூன் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். அரசதகவல் நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபாவுக்கும் குறைவான கொடுப்பனவுகளைப் பெறுபவர்களுக்கு, தற்போது அவர்கள் பெறும் தொகையுடன் 5 ஆயிரத்தை ஈடுசெய்யும் வகையில் எஞ்சிய தொகை வழங்கப்படும். அதேபோல் பயணக் கட்டுப்பாட்டால் வருமானத்தை இழந்தவர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். - என்றும் அவர் தெரிவித்தார். (த-ஒ.5,44)

## மீனவர்கள்....

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

சாலை சிறுகடலில் இரணைப்பாலையைச் சேர்ந்த மீனவர்கள் றால் கூடு கட்டி றால் பிடிப்பில் ஈடுபட்டுள்ளார்கள். நேற்றுமுன்தினம் அவர்கள் கட்டியிருந்த றால் கூட்டில் றால்கள் களவாடப்பட்டுள்ளன என்று தெரிவித்த இரணைப்பாலையைச்சேர்ந்த மீனவர்கள், நேற்றுமுன்தினம் இரவு சாலை சிறுகடலில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மாத்தளன் பகுதி மீனவர்களைத் தாக்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு மாத்தளன் பகுதியைச் சேர்ந்தவர்களும் தாக்கியுள்ளனர்.

இதன்போது, இரணைப்பாலையைச் சேர்ந்த மூன்று மீனவர்களும், மாத்தளன் பகுதியைச் சேர்ந்த ஒரு மீனவரும் காயமடைந்தனர். அவர்களே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குலின்போது இரண்டு மோட்டார் சைக்கிள்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இரணைப்பாலையைச் சேர்ந்த ஒருவரையே பொலிஸார் கைதுசெய்துள்ளனர். முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-19)

## வவுனியா....

உறுதிப்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அதன் முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின. இதன்போது தொற்றுக் கண்டறியப்பட்டது. வவுனியாவில் மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் நீதிவான் நீதிமன்றங்கள் இரண்டு ஆகியவை உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த.ஒ.110)

## வடக்கில்...

யில் 73 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் 278 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 19 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்**

காரைநகர் பிரதேச மருத்துவமனையில் 12 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 3 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், சங்கானை பிரதேச மருத்துவமனையில் 5 பேருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 19 பேருக்கும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேருக்கும் (22ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகள்), பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், நொதேர்ன் சென்றல் தனியார் மருத்துவமனையில் ஒருவருக்கும் என 64 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி**

முழங்காவில் ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், இரணைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக்கும் என 4 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு இராணுவத் தலைமையகத்தில் ஒருவருக்கும், ஏ.பி.எச்.சில் ஒருவருக்கும் என 2 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**மன்னார்**

மடு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**வவுனியா**

வவுனியா மாவட்ட மருத்துவமனையில் 10 பேருக்கும், வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும் என 19 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒமேகா லைன் தனியார் நிறுவனத்தில் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.5)

---

தடுப்பூசி வழங்கலில்

# வடக்கு - தெற்கு என்ற வேறுபாடு கிடையாது

### கூறுகின்றார் சுகாதார அமைச்சர்

கொழும்பு, மே 29

கொரோனா வைரஸின் பாதிப்பிலிருந்து நாட்டு மக்கள் அனைவரையும் காப்பாறுவதே அரசின் திட்டம். அதற்காகவே தடுப்பூசிகளைப் பல நாடுகளிலிருந்து கொள்வனவு செய்கின்றோம். தடுப்பூசி வழங்கல் நடவடிக்கையில் வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற வேறுபாடு கிடையாது. இவ்வாறு தெரிவித்தார், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டின் நான்கு திசைகளிலும் வாழும் அனைத்து மக்களுக்கும் கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றப்படும்.

இதேவேளை, பி.சி.ஆர். பரிசோதனைகள் வடக்கில் போதாமல் இருப்பது உண்மைதான். எனினும், இங்கு பி.சி.ஆர். பரிசோதனை [illegible] எடுத்துள்ளோம்.

கொரோனாத் தடுப்பு தேசிய செயலணி கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண மக்கள் தொடர்பில் அரசு அதிவிசேட கவனம் செலுத்தியுள்ளது. ஏனெனில், இங்கும் நாள்தோறும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிக தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். தனிமைப்படுத்தல் நடவடிக்கையும் இங்கு பரவலாக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளால் மாத்திரம் கொரோனாவை முற்றாக இல்லாதொழிக்க முடியாது. மக்கள் அனைவரும் சுகாதார விதிமுறைகளை ஒழுங்காகக் கடைப்பிடித்தால் கொரோனாவை விரைவில் [illegible]" என்றார். (த-22)

## 2,845 பேருக்கு கொரோனா

கொழும்பு, மே 29

நாட்டில் நேற்று 2 ஆயிரத்து 845 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 77 ஆயிரத்து 706 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 362 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக் காரணமாக மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 19 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

## கொரோனாவால் மேலும் 38 பேர் உயிரிழப்பு

### மொத்தச் சாவு 1,363 ஆக அதிகரிப்பு

கொழும்பு, மே 29

இலங்கையில் மேலும் 38 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் இதனை நேற்றிரவு அறிவித்துள்ளது. இதற்கமைய நாட்டில் பதிவான மொத்த கொரோனா இறப்புகளின் எண்ணிக்கை ஆயிரத்து 363 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org